# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2024.05.29 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# முற்பாதுகாப்பு வழிமுறைகள் (திருத்தம்)

**2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*அதிமேதகு சனாதிபதி அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### ***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2 :*** *அவ்வாசகமானது (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறாக இப்பிரிவின் சட்டப்பயனாவது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் "வர்த்தக பணிப்பாளர் தலைமையதிபதி," என்பவரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை "சர்வதேச வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்" என்பவரினால் பிரயோகிக்கபடுதலும், புரியப்படுதலும் மற்றும் நிறைவேற்றுப்படுதலும் வேண்டுமென ஏற்பாடு செய்வதாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தைத் திருத்துகின்றதென்பதுடன் இத்திருத்த மானது 2 ஆம் வாசகத்திற்கு செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தனமையானதாகும்.*

ச.வ.- ஓ. 46/2024

## 2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் இலக்க, முற்பாதுகாப்பு வழிமுறைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கான திருத்தம்*

**2.** இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ''(இதனகத்துப்பின்னர் ''பணிப்பாளர் தலைமையதிபதி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வர்த்தக பணிப்பாளர் தலைமையதிபதி,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(இதனகத்துப்பின்னர் ''செயலாளர்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சர்வதேச வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்,'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*''பணிப்பாளர் தலைமையதிபதி'' என்பதற்கான குறிப்பீடு ''சர்வதேச வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்'' குறிப்பீடாக இருத்தல் வேண்டும்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தில், அறிவித்தலில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில், வேறு ஆவணங்களில், ''பணிப்பாளர் தலைமையதிபதி'' என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிளெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, ''சர்வதேச வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்'' என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.